ந.க.எண்.அ1/1748/2023 நாள் : .11.2023

**ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை,**

**இராமநாதபுரம் மாவட்டம்**

**அறிவிக்கை (Notification)**

**பரமக்குடி ஊராட்சி ஒன்றிய பொது நிதியின் கீழ் ஊதியம் பெறும் ஈப்பு ஓட்டுநர் ,அலுவலக உதவியாளர், மற்றும் இரவுக்காவலர் காலிப்பணியிடங்களுக்கு நேரடி நியமனம்**

இராமநாதபுரம் மாவட்டம், ஊரக வளர்ச்சி அலகில், பரமக்குடி ஊராட்சி ஒன்றிய பொது நிதியின் கீழ் ஊதியம் பெறும் காலியாக உள்ள ஈப்பு ஓட்டுநர் ,அலுவலக உதவியாளர் மற்றும் இரவுக்காவலர் காலிப்பணியிடங்களுக்கு நேரடி நியமனம் மூலம் நிரப்பிட தகுதியான விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

**காலிப்பணியிடங்களின் விபரம்**

| வ. எண் | பதவியின் பெயர் | இனசுழற்சி விபரம் | காலிப்பணியிடங்களின் எண்ணிக்கை | ஊதிய விபரம் |
|---|---|---|---|---|
| 1 | ஈப்பு ஓட்டுநர் | இனச்சுழற்சி எண் 1 / பொதுப்போட்டி (முன்னுரிமை பெற்றவர்) கொரோனா தொற்றால் பெற்றோர் இருவரையும் இழந்த இளைஞர்கள் | 1 ( ஒன்று) | ரூ.19500-62000 (நிலை 8) |
| 2. | அலுவலக உதவியாளர் | இனச்சுழற்சி எண் 2 / ஆதி திராவிடர் (அருந்ததியர்)/ (முன்னுரிமை பெற்றவர்) பெண் ஆதரவற்றி விதவை | 1 ( ஒன்று) | ரூ.15700-50000 (நிலை 1) |
| 3. | அலுவலக உதவியாளர் | இனச்சுழற்சி எண் 4 / பிற்படுத்தப்பட்டோர் (முஸ்லிம்கள் தவிர) (முன்னுரிமை பெற்றவர்) கொரோனா தொற்றால் பெற்றோர் இருவரையும் இழந்த இளைஞர்கள் | 1 ( ஒன்று) | |
| 4. | இரவுக்காவலர் | பொதுப்போட்டி (முன்னுரிமை அற்றவர்) | 1 ( ஒன்று) | ரூ.15700-50000 (நிலை 1) |

**தகுதிகள் :-**

1)வயது

| வ.எண் | பதவியின் பெயர் | இனம் | வயது (01/07/2023 அன்று) |
|---|---|---|---|
| 1 | ஈப்பு ஓட்டுநர் | பொதுப்பிரிவினர் | 18-32 |
| | | பிற்படுத்தப்பட்டோர் ,மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் | 18-34 |
| | | ஆதிதிராவிடர் /பழங்குடியினர் | 18-42 |
| 2 | அலுவலக உதவியாளர் | பொதுப்பிரிவினர் | 18-32 |
| | | பிற்படுத்தப்பட்டோர் ,மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் | 18-34 |
| | | ஆதிதிராவிடர் /பழங்குடியினர் | 18-37 |
| 3 | இரவுக்காவலர் | பொதுப்பிரிவினர் | 18-32 |
| | | பிற்படுத்தப்பட்டோர் ,மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் | 18-34 |
| | | ஆதிதிராவிடர் /பழங்குடியினர் | 18-37 |

2) கல்வித்தகுதி மற்றும் இதர தகுதிகள்

| வ. எண் | பதவியின் பெயர் | கல்வித் தகுதி | இதர தகுதி |
|---|---|---|---|
| 1 | ஈப்பு ஓட்டுநர் | எட்டாம் வகுப்பு தேர்ச்சி | 1.செல்லத்தகுந்த ஓட்டுநர் உரிமம் பெற்றிருக்க வேண்டும்.<br>2.ஓட்டுநர் உரிமம் பெற்று 5 ஆண்டுகளுக்கு குறையாமல் மோட்டார் வாகனைங்களை ஓட்டுவதில் நடைமுறை அனுபவம் பெற்றிருக்க வேண்டும். |
| 2. | அலுவலக உதவியாளர் | எட்டாம் வகுப்பு தேர்ச்சி | மிதிவண்டி ஓட்டத்தெரிந்தவராக இருக்க வேண்டும். |
| 3. | இரவுக்காவலர் | எழுத படிக்கத் தெரிந்திருக்க வேண்டும் | - |

**நிபந்தனைகள்:**

1) விண்ணப்பதாரர்கள் கல்வித்தகுதி, இருப்பிடம், சாதிச்சான்று, முன்னுரிமை சான்று ஆகியவைகளுக்கு ஆதாரம் கண்டிப்பாக இணைக்கப்பட வேண்டும். (இருப்பிட சான்று தொடர்புடைய வட்டாட்சியரிடம் பெற்று சமர்ப்பிக்க வேண்டும்)

2) இனசுழற்சி, வயது மற்றும் கல்வித் தகுதி போன்ற தகுதிகள் இல்லாத நபர்களிடமிருந்து வரப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

3) ஒவ்வொரு பணியிடத்திற்கும் தகுதியின் அடிப்படையில் தனித்தனியே விண்ணப்பிக்க வேண்டும். (ஒரே விண்ணப்பத்தின் மூலம் ஒன்றிற்கு மேற்பட்ட காலிப்பணியிடங்களுக்கு விண்ணப்பித்திருந்தால் அவ்விண்ணப்பம் நிராகரிக்கப்படும் )

4) அரசு விதிகளின்படி இன சுழற்சி முறை பின்பற்றி நியமனங்கள் மேற்கொள்ளப்படும்.

5) பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் உரிய சான்றுகளின் நகல்களுடன் **பரமக்குடி ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில்** நேரிலோ அல்லது பதிவஞ்சல் மூலமாகவோ **04.12.2023 முதல் 18.12.2023 அன்று பிற்பகல் 5.45 மணிக்குள்** அனுப்பி வைக்க வேண்டும். காலம் கடந்து பெறப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

6) விண்ணப்பதாரர் அறிவிக்கப்பட்ட ஊராட்சி ஒன்றியத்தில் வசிப்பவராக இருக்க வேண்டும்.

7) விண்ணப்பதாரர்களுக்கு நேர்முகத்தேர்வு நடைபெறும் இடம் மற்றும் தேதி குறித்து நேர்காணல் கடிதம் (Call Letter) அனுப்பி வைக்கப்படும்

8) அலுவலக உதவியாளர் காலிப்பணியிடங்களுக்கான விபரங்கள் மற்றும் விண்ணப்ப படிவம் இராமநாதபுரம் மாவட்டத்தின் https://ramanathapuram.nic.in இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

30/11/23

ஆணையாளர்
பரமக்குடி ஊராட்சி ஒன்றியம்

30.11.2023